# ஶ்ரீ :

# ஶ்ரீ மதே ராமாநுஜாய நம:

# ஶ்ரீ வ ர வ ர மு னி யே நம:

# ஶ்ரீ வ ர த கு ர வே நம:

# ஶ்ரீமத் ஆத்தான் ஸ்வாமிகளின் வைபவம்

காஞ்சிபுரத்துக்கருகில் முடும்மை என்னும் அக்ரஹாரத்தில் ஶ்ரீவத்ஸகோத்ரத்தில் அவதரித்தவர் ஶ்ரீவரதாசாரியர். (ஶ்ரீ முடும்மை நம்பி). இவர் ஶ்ரீராமானுஜரின் ஸஹோதரியின் கணவர். இவர் ஶ்ரீராமானுஜரை ஆச்ரயித்தார். ஶ்ரீகூரத்தாழ்வானின் அன்புக்கு பாத்ரமானவர்.

74 ஸிம் ஹாஸநாதிகளில் ஶ்ரீமுடும்பை நம்பியும் ஒருவராவர். இவர் குமாரர் ஶ்ரீராமாநுஜநம்பி. ஶ்ரீமுதலியாண்டான் போலே எம்பெருமானர்க்கு ராமாநுஜ நம்பியும் மருமான் ஆவார். இவர் குமாரர் ஶ்ரீமுடும்பையாண்டான் (தாசரதி) ஶ்ரீமுடும்பையிலிருந்து ஶ்ரீரங்கத்திற்கு குடிபெயர்ந்தார். வடக்குத்தீருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா, எறும்பியப்பா வம்ஸத்தினரும் முடும்பை நம்பி வம்சத்தை சேர்ந்தவர்களே.

முடும்பை வம்ஸத்தில் தேவராஜகுரவின் (பேரருளாளஸ்வாமி) குமாரராக ராமாநுஜம் பிள்ளை பங்குனி மாதம் புனர்பூசம் திருநஷ்த்தில் அவதரித்தார்.

உதிதம் பால்குநேமாஸி புநர்வஸ் வபியோடுநி !<br>
வாத்ஸ்ய ராமாநுஜாசார்யம் வந்தே ஸ்த்குண சாகரம் !!

நம்பெருமாள் நியமணப்படி கோயில் பெரியதிருமண்டபத்திலே நம்பெருமாள் திருமுன்யே ஈடு முப்த்தாநாயிரப்படிகாலசேஷபம் செய்து "ஈடுமுப்த்தாறாயிரப்பெருக்கர்" என்ற அபிதானத்தையும் "ஸ்ரீசைலேசதயாபாத்ரம்", தனியனையிம் அடைந்த ஸ்ரீமந் மணவாளமாமுனிகளின் காலசேஷப கோஷ்டி மிகவும் ப்ரஸத்தமாக இருந்தது. அவருடைய கோஷ்டியில் அந்வயித்த முதலிகளில் ராமாநுஜம் பிள்ளையும் ஒருவர். ராமாநுஜம் பிள்ளையும், மாமுனிக்கு பாத ரேகை ஸ்தானத்தராயிருந்த ராமாநுஜ ஜீயரும் (வானமாமலை) ஒருவருக் கொருவர் அத்யந்தப்ரியதமராயிருந்தனர், வானமாமலை ஜீயருக்கு ப்ரிய ஸீஹ்ருத்தாக ராமாநுஜம் பிள்ளை இருந்தார். அவரிடம் பகவத் விஷயகால சேஷபமும் பண்ணினார். இவர் வானமாமலை ஜீயர் ஸ்வாமியின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவர்.

ராமாநுஜம்பிள்ளையின் திருக்குமாரர் ஸ்ரீவரதாசாரியார் (ஸ்ரீஆத்தான் ஸ்வாமி) ஆவணி மாதம் சித்திரைநஷத்திரத்தில் அவதரித்தார்.

ஸிம்ஹே சித்ரோடுஸம்பூதம் வத்ஸவம்சாப்தி கௌஸ்துபம் !
ராமாநுஜார்ய ஸச்சிஷ்யம் வரதாஹ்வய மாச்ரயே !!

இவர் பால்யத்தில் திருத்தகப்பாணாரோடு ஸ்ரீரங்த்தில்
மாமுனி கோஷ்டியில் அந்வயித்தவர். வானமாமலை ஜீயரின் அத்யந்தப்ரிய பாதரராயும், அவர் திருவடிகளில் ஆரா அன்புடையவராயும் இருந்தார்.

பெரியஜீயருக்கு வார்த்திகத்தோடு நோயும் வந்து அநுவர்த்திக்க, தம்மைஆச்ரயித்திருந்த முதலிகள் பலரையும் ஒரோர் திவ்யதேசங்களுக்கு சென்று எம்பெருமான் கைங்கர்கயங்களை நடத்திவரும்படி நியமித்தருளினார். ஸ்வதேசமானதிருநகரியில் ஸ்வாமி ஆழ்சார்திருவடிகளில் திருவுள்ளம் குடிபோய் "ஸ்வாமி ஆழ்வார் கைங்கர்யங்களை குறைவின்றி செய்யவல்லார் யார்" என ஆராய்ந்து ஸ்ரீராமாநுஜம்பிள்ளையையும் அவர்குமாரர் ஆத்தானையும் அழைத்து, நீங்கள் திருநகரி சென்று ஸ்ரீஆதிப்பிரானையும் ஸ்ரீசடகோபரையும் (நம்மாழ்வாரையும்) நமக்காகித்துஞ்சும் போதும் விடாது அநுவர்த்தித்துத் திருவாய்மொழியையும் வளர்த்துக்கொண்டு போருங்கோள்" என்று நியமித்தார். ஜீயர் திருநாடலங்கலத்தருளிவைாறே, வானமாமலை ஜீயரும் அருகில் இல்லாமையாலும் (பத்ரிகாச்ரமயாத்திரை சென்று இருந்ததால்) போரக்லேசத்தோடேயிருந்த ராமாநுஜம்பிள்ளைக்கு, ஒரிரவில் ஸ்வாமி நம்மாழ்வார் "உடனேதிருநகரிக்கு வந்துசேரும்படி" ஸ்வப்ன முகேந நியமித்தருளினார். மாமுனிகள் நியமனமும், மகிழ்மாறன் நியமனமும் பிள்ளையைத் தெளிவிக்கத் தெளிந்து, நம்பெருமாளிடம் விடைகொண்டு, குடும்பத்துடனும் சிஷ்யர்களுடனும் திருநகரிநோக்கி விடை கொண்டார். பிள்ளையும் ஆதிப்பிரானையும், திருப்புளியினடியிலுறையும் ஞானதேசிகனையும் ஸேவித்து அளப்பரிய ஆனந்தமடைந்தார். ஸ்வாமி ஆழ்வாரும் போரவுகந்தருளி, அர்ச்சகமுகேந "சடபோபாசாரியார்" என்று அருளப்பாடிட்டு "நம்கோயில் பரிகரமனைத்துக் கொத்தும் நிர்வஹித்து வாரும்" என்று நியமித்தருளினார்.

ராமானுஜம்பிள்ளை கந்தாடை நாயனுக்கு பகவத்விஷயம் ஸாதிக்க, கந்தாடை நாயனும் திருவாய் மொழிக்கு ஸம்ஸ்க்ருத அரும்பதம் அருளிச்செய்தார். பகவத் விஷய அரும்பதத்தில் "பிள்ளை நிர்வாஹம்", என்று சில இடங்களில் ராமானுஜம் பிள்ளையின் நிர்வாஹங்கள் காட்டப்பட்டுள்ளன.

திருநகரிக் கெழுந்தருளிய சில வருடங்களிலேயே, ராமாநுஜம் பிள்ளை பரமபதித்து விட்டார். இவருடைய திருக்குமாரர் "ஆத்தான்" என்கிற வரதாசாரியர் ஸ்வாமி, ஆதிநாதர் ஆழ்வார் கோயில் கைங்கரியங்களை குறைவின்றி நடத்திவந்தார். 'பகவத்விஷயம் வரதாசாரியார்' என்றே நீருபகமாம் படியிறே, பகவத் விஷயத்தில் அவகாஹநம் இருந்தபடி, திருநகரியில் திருப்புளியாழ்வாரடியில் மணவாளமாமுனி திருவடிக்கீழ் பகவத்விஷயம் ஸாதித்தருளினார்.

குன்றத்தூர் அப்பனுக்கு இவர்பகவத்விஷயம் ஸாதிக்க, அவரும் திருவாய்மொழிக்கு அரும்பதம் அருளிச் செய்தார். இவர்திருவடிகளில் ஆச்ரயித்த வேதாந்திராமநுஜ ஜீயரும் "திவ்யஸீரிப்பாவதீகை" முதலானது அருளிச் செய்தார்.

இன்றும் இவருடைய வம்ஸத்தினர்கள் ஆழ்வார்திருநகரியிலும், ஸ்ரீரங்கத்திலும் கோயில் கைங்கர்யங்கள் செய்து வருகின்றனர்.

---

**ஸ்ரீமதே ரம்ய ஜாமாத்ரு முநீந்த்₃ராய மஹாத்மநே |**

**ஸ்ரீரங்க₃வாஸிநே பூ₄யாத் நித்யஸ்ரீர் நித்யமங்க₃ளம் ||**

**மங்க₃ளாஸாஸன பரை: மத₃₃ாசார்ய புரோக₃மை: |**

**ஸர்வைஸ்ச பூர்வை ராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்க₃ளம் ||**

நன்றி: ஆழ்வார் திருநகரி ஸ்ரீ மத் ஆத்தான் ஸ்வாமிகளுக்கு